

திண்டுக்கல் மாவட்டம், வி.கூத்தம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பாஸ்கரன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், மாவட்டக் கல்வி அலுவலர்(பொ) சண்முகவேல், வீரக்கல் ஊராட்சி மன்றத் தலைவர் இராஜேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

## வயநாட்டில் நில அதிர்வு : பொதுமக்கள் பீதி!

திருவனந்தபுரம், ஆக.12-

கடந்த வாரம் கேரள மாநிலம் வயநாட்டில் பயங்கர நிலச்சரிவால் ஏற்பட்ட பீதியில் இருந்து இன்னும் அப்பகுதி மக்கள் மீளவில்லை. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து தினமும் உடல்களும், உடல் பாகங்களும் கிடைத்து வருகின்றன. தொடர்ந்து மீட்புப்பணி நடக்கும் நிலையில், நிலச்சரிவு ஏற்பட்ட சூரல்மலை, முண்டக்கையிலிருந்து 25 கிமீ தொலைவிலுள்ள பல பகுதிகளில் நேற்று லேசான நில அதிர்வும், பூமிக்கடியில் இருந்து முழக்கமும் கேட்டது மக்களிடையே மீண்டும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

### ஜார்கண்ட் மாநில

# முதலமைச்சர் ஹேமந்த் சோரன் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 12–

ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் பிறந்த நாளையொட்டி அவருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியினை தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



இதுகுறித்து மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

**ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்.**

**பலமான தடைகளை எதிர்கொண்ட போதும், மக்களின் உரிமைகளுக்காக போராடும் தங்களின் மன வுறுதி அசைக்க முடியாதது என்பதை தாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள். தாங்கள் இதே வலிமையுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து வழி நடத்த விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### எலக்ட்ரானிக்ஸ் துறையை வளப்படுத்த

# டான்டலம் போன்ற அரிய வகை உலோகங்களை அகழ்ந்தெடுக்க அரசிடம் திட்டங்கள் உள்ளனவா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர், எஸ். ஜெகத்ரட்சகன் 07 ஆகஸ்ட் 2024 அன்று மக்களவையில், எலக்ட்ரானிக்ஸ் துறையை வளப்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான, டான்டலம் போன்ற அரிய வகை மதிப்புமிக்க உலோகங்களை அகழ்ந்தெடுக்கவும். அதற்கு உரிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதற்கான விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.



இதற்கு அமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

உலோகங்கள் மற்றும் தாதுக்கள் சட்டம் 1957ன்படி, ஒன்றிய அரசு 24 வகை தாதுக்களை அரிய வகை மற்றும் மதிப்புமிக்க உலோகங்களாக அறிவித்துள்ளது என்றும், கடந்த நான்கு நிதி ஆண்டுகளில் டான்டலம் போன்ற அரிய வகை உலோகங்களை அகழ்ந்தெடுக்க, இந்திய மண்ணியல் ஆய்வு நிறுவனத்தின் மூலம், 6 மாநிலங்களில் 6 திட்டங்களை, நிறைவேற்றி வருகின்றது என்றும். குஜராத், அருணாச்சல பிரதேசம். ராஜஸ்தான், சட்டீஸ்கர், பீகார் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில், லியோமியம், டான்டலம், டங்ஸ்டன் மற்றும் லித்தியம் ஆகிய அரிய வகை உலோகங்கள் கண்டறியப்பட்டு ஆய்வுக்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்.

ராஜஸ்தானில் மட்டும் 164 இலட்சம் டன்கள் அரிய வகை உலோகங்கள் இருப்பில் உள்ளன என்றும், இந்த நிதியாண்டில் இதற்காக பல வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் ஜி. கிஷண் ரெட்டி அரக்கோணம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்தார்.

### பட்டினப்பாக்கம் – லூப் சாலையில் –

# சர்வதேசத் தரத்தில் - ரூ.10 கோடியில் நவீன மீன் அங்காடி!

## இன்று திறக்கப்படுகிறது!

சென்னை, ஆக.12-

பட்டினப்பாக்கம் லூப் சாலையில் ரூ.10 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள நவீன மீன் அங்காடி இன்று திறக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், 125வது வார்டுக்கு உட்பட்ட பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டியுள்ள லூப் சாலையின் இருபுறங்களிலும் மீன் கடைகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரை உள்ள இந்த லூப் சாலையை ஆக்கிரமித்து மீன்கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கடைகள் மற்றும் இங்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்களால், லூப் சாலையில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாக, சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு விசாரணை நடத்தியது. மேலும், அந்த பகுதியில் ஆக்கிரமிப்பு மீன் கடைகளை மாநகராட்சி அகற்றவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் போலீசார் இணைந்து, மெரினா காவல் நிலையம் முதல் பட்டினப்பாக்கம் வரையிலான ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்காதபடி கடைகளை ஒழுங்குபடுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து கடைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இதனிடையே, முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவின்படி, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு சட்டமன்ற மானிய கோரிக்கை விவாதத்தின் போது, மீனவர்களும், பொதுமக்களும் பயன் பெறும் வகையில், பட்டினப்பாக்கம் கடற்கரை லூப் சாலையில் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டு விரைவில் மீனவர்கள் பயன்பாட்டிற்கு வரும் என அறிவித்தார். முதல்வரின் உத்தரவின் படி, சென்னை மாநகராட்சியின் சார்பில் பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டியுள்ள லூப் சாலையில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் வகையிலும், மீனவர்களின் நலன் மற்றும் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும் ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மீன் அங்காடியில் மீனவர்களுக்கு கடை ஒதுக்கும் பணியும் ஏறத்தாழ கணக்கெடுப்பு மூலம் முடிவடைய உள்ளது. இதுகுறித்து நொச்சிக்குப்பம் மீனவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடந்து முடிந்துள்ளது. மேலும், எந்தெந்த மீனவர்களுக்கு கடை ஒதுக்க வேண்டும் என மீனவர்கள் சங்கம் சார்பில் கணக்கெடுக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியிடம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இதனை சரிபார்க்கும் பணியில் மாநகராட்சி ஈடுபட்டு வருகிறது. விரைவில் முடிவு செய்யப்பட்டு மீனவர்களுக்கு கடைகள் ஒதுக்கப்பட உள்ளது. இதற்கான பணிகளை சென்னை மாநகராட்சி முடித்து விட்டது. தற்போது இந்த மீன் அங்காடியில் அனைத்து பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. இந்த நவீன மீன் அங்காடி நாளை திறக்கப்பட உள்ளது. மீன் அங்காடி திறக்கப்பட்டால் மீனவர்கள் நிச்சயம் பயன்பெறுவர். மீன் அங்காடி சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் 12,796 மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் ரூ.1,000/ பெறுவதற்கான பற்று அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் கே.பி.ஜெகநாதன் மற்றும் நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### வக்ஃப் சட்டத் திருத்த மசோதா:

# நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைப்பு!

## ஆ.ராசா – முகமது அப்துல்லா – ஓவைசி இடம்பெற்றனர்!

புதுடெல்லி, ஆக. 12-

மக்களவையில் வியாழக்கிழமை அறிமுகம் செய்யப்பட்ட வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்ய 31 பேர் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு வெள்ளிக்கிழமை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் மக்களவை உறுப்பினர்கள் 21 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

குழுவில் மக்களவை உறுப்பினர்கள் 21 பேர் இடம் பெறுவதற்கான தீர்மானத்தை மத்திய சிறுபான்மையினர் நலத் துறை அமைச் ரிஜிஜு வெள்ளிக்கிழமை மக்களவையில் அறிமுகம் செய்தார். அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதுபோல, இந்தக் குழுவில் 10 உறுப்பினர்கள் இடம்பெறுவதற்கான தீர்மானம் மாநிலங்களவையில் பிற்பகலில் அறிமுகம் செய் யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மக்களவை உறுப்பினர்கள் ஜெகதாம்பிகா பால், நிஷிகாந்த் பு துபே, தேஜஸ்வி சூரியா, அபராஜிதா சாரங்கி, சஞ்சய் ஜெய்ஸ் வால், திலிப் சய்கியா, அபிஜித் கங்கோபாத்யாய, டி.கே. அருணா (பாஜக), கௌரவ் கோகோய், இம்ரான் மசூத், முகமது ஜாவேத் (காங்கிரஸ்), மௌலானா மொஹி புல்லா (சமாஜவாதி), கல்யாண் பானர்ஜி (திரிணமூல் காங்கிரஸ்), ஆ.ராசா (திமுக), லவு ஸ்ரீ கிருஷ்ண தேவராயுலு (தெலுங்கு தேசம்), திலேஷ்வர் கமாய்த் (ஐக்கிய ஜனதா தளம்), அர்விந்த் சாவந்த் (சிவசேனை உத்தவ் தாக் கரே பிரிவு), பால்ய மாமா சுரேஷ் கோபிநாத் மாத்ரே (தேசியவாத காங்கிரஸ்சரத் பவார் பிரிவு), நரேஷ் மஸ்கே (சிவசேனை), அருண் பார்தி (லோக் ஜனசக்தி ராம்விலாஸ் பாஸ்வான்), அசா துதீன் ஒவைசி (அகில இந்திய மஜ்லீஸ்) ஆகிய 21 பேர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

மாநிலங்களவை உறுப்பினர்கள் பிரிஜ் லால், மேத்தா விஷ்ரம் குல்கர்னி, குலாம் அலி, ராதா மோகன் தாஸ் அகர்வால் (பாஜக), சையது நசீர் ஹுசைன் (காங்கிரஸ்), முகமது நதிமுல் ஹக் (திரிணமூல் காங்கிரஸ்), விஜய்சாய் ரெட்டி (ஒய் எஸ்ஆர் காங்கிரஸ்), முகமது அப் துல்லா (திமுக), சஞ்சய் சிங் (ஆம் ஆத்மி) மற்றும் நியமன உறுப்பினராக தர்மஸ்தாலா வீரேந் திர ஹெக்டே ஆகிய 10 எம்.பி.க்கள் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நாடாளுமன்ற கூட்டுக் குழு மசோதாவை ஆய்வு செய்து, அடுத்த நாடாளுமன்ற கூட்டத் தொடரின் முதல் வாரத்தின் கடைசி நாளில் தனது அறிக் கையை தாக்கல் செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'வக்ஃப் வாரிய சட்டம் 1995-ஐ 'ஒருங்கிணைந்த மேலாண்மை, அதிகாரமளித்தல், திறன் மேம்பாடு சட்டம் 1995' என்று பெயர் மாற்றம் செய்யவும், வக்ஃப் வாரியத்தில் முஸ்லிம் பெண்கள் மற்றும் முஸ்லிம்கள் அல்லாத இரண்டு நபர்களை உறுப்பினர்களாக இடம்பெறச் செய்வது, வாரிய நிலங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டாயப் பதிவு செய்வது, வக்ஃப் நிலமா, இல்லையா என்பதை மாவட்ட நிர்வாகம் மற்றும் நீதிமன்றங்கள் முடிவு செய்ய அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு மாற்றங்களை சட்டத்தில் மேற்கொள்ளும் வகையில் இந்த சட்டத்திருத்த மசோதாவை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

இந்த மசோதா எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே மக்களவையில் வியாழக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது. இதை ஆய்வு செய்ய தற்போது நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

### ஜி.எஸ்.டி. - நான்கு தொழிலாளர் நலச் சட்டங்களால் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்கள் நிதியில்லாமல் அவதியுறுகின்றன!

# தொழிலாளர் நல வாரியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்!

## மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக 12-

மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் அவர்கள் 31.07.2024 அன்று ஜி.எஸ்.டி. மற்றும் நான்கு தொழிலாளர் நலச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்தன் மூலம் செஸ் மற்றும் கலால் வரி வசூல் திரும்பப் பெறப்பட்ட பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென சிறப்பு தீர்மானம் மீது பேசினார்.



அவர் மாநிலங்களவையில் பேசியது வருமாறு:-

ஐயா, சுண்ணாம்புக்கல், டோலமைட் சுரங்கத் தொழிலாளர் நல நிதி, சினிமா தொழிலாளர் நல நிதி போன்ற பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மூலம் கலால் வரி வசூல் செய்யப்பட்டு, அந்த நிதி பல்வேறு தொழிலாளர் வாரியங்களுக்கு மாற்றப்பட்டது. தற்போது ஜி.எஸ்.டி. நடைமுறைக்குப் பிறகு, இந்த சட்டங்கள் ரத்து செய்யப்பட்டு, கலால் வரி வசூல் நிறுத்தப்பட்டது.

இதேபோல், நான்கு தொழிலாளர் சட்டங்கள் இயற்றிய பிறகு, இரும்பு, மாங்கனீஸ், குரோம், தாது, சுரங்கத் தொழிலாளர் நல செஸ் சட்டம், பீடித் தொழிலாளர்கள் நல செஸ் சட்டம், தேயிலை வரி, உப்பு செஸ் சட்டம் போன்ற செஸ் வசூல் தொடர்பான சில தொழிலாளர் நலச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் அந்தந்த தொழிலாளர் நல வாரியங்களுக்கு மாற்றப்பட்டு வந்த, செஸ் வசூல் நிறுத்தப்பட்டது.

சுரங்கத் தொழிலாளர் நல வாரியம், பீடித் தொழிலாளர் நல வாரியம் போன்ற தொழிலாளர் நல வாரியங்கள், சுகாதாரம், கல்வி, மகப்பேறு பலன்கள், மருத்துவமனை சிகிச்சை, குழுக் காப்பீடு, வீட்டு வசதி, இறப்பு மற்றும் ஓய்வூதிய பலன்கள் தொடர்பான தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக பணத்தைச் செலவழித்து வருகின்றன. , தற்போது இந்த நல வாரியங்கள் தொழிலாளர் நலனுக்கான பணிகளை மேற்கொள்ள நிதியில்லாமல், தொழிலாளர்கள் அவதிப்படுகின்றனர்.

எனவே, நிதியமைச்சகம் இப்பிரச்னையை பரிசீலித்து, தொழிலாளர் நலன் கருதி, இந்த தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகளை தொடர, பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் பேசினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் உயர்கல்வி பயிலும் அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி (தமிழ்வழி) மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் "தமிழ்ப் புதல்வன் திட்டத்தை" தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்து, மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.